# புறஜாதி மக்களுக்கான நியாயத்தீர்ப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு! இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். வேதாகம ஆட்சி முறைக்காலங்களைப்பற்றியதான வேதபாடங்களில் இதற்கு முன்பாக, **சபை எடுத்துக்கொள்ளப்படுதல், அந்திக் கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அர்மகெதோன் யுத்தம்** போன்ற வேத பாடங்களை படித்தோம். இவற்றுக்கு அடுத்த படியாக வேதாகம சரித்திரத்தில் நடைபெறப்போகும் சம்பவம் **"புறஜாதி மக்களுக்கான நியாயத்தீர்ப்பு ".** இந்த வேதபாடத்தில் இந்த நியாயத்தீர்ப்பைப்பற்றி படிப்போம்.

***மத் 25:31-46*** *31 அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வருடும்போது,*
*தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.*
*32 அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும்*
*வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, 33 செம்மறியாடுகளைத் தமது*
*வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்.*
*34 அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால்*
*ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச்*
*சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.*
*40 அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்*
*செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். 41 அப்பொழுது,*
*இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன்*
*தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*
***2 தெச 1: 9*** *அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை*
*விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர்*
*வரும்போது,*
*10 அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி,*
*நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.*


***சங்கீதம் 50*** ன் *1* முதல் *6* வரை உள்ள வசனங்களும் இந்த நியாயத்தீர்ப்பையே குறிப்பிடுவதாக சில வேத பண்டிதர்கள் கருதுகின்றனர்.

***மத் 16:27*** *மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.*

வேதாகமத்தில் **7 முக்கிய நியாயத்தீர்ப்புகள்** குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் இதுவும் ஒன்று. இந்த நியாயத் தீர்ப்பைப்பற்றி படிக்கும்போது, இதை மற்ற நியாயத்தீர்ப்புகளுடன் சேர்த்து தவறாக புரிந்து கொள்ளாமல் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக இந்த நியாயத்தீர்ப்பையும், வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பையும் கலக்காமல் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். புறஜாதி மக்களுக்கான நியாயத்தீர்ப்பு , வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கும் முற்றிலும் மாறுபட்டது. இரண்டும் வெவ்வேறு நியாயத்தீர்ப்புக்கள்.

## சகல ஜனங்கள்





***மத்தேயு 25: 31*** *அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச்*
*சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள*
*சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.*
*32 அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச்*
*சேர்க்கப்படுவார்கள்...........*

***மத்தேயு 25: 32*** ல் குறிப்பிடப்பட்டுள்ள ***'சகல ஜனங்கள்'*** என்ற வார்த்தை குறிப்பது யூதர்கள் அல்லாத, யூதர்களோடு சம்பந்தப்பட்ட மற்ற **'புறஜாதி மக்களை'.** இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களில் யார் யாரெல்லாம் உபத்திரவக்காலத்தில் இயேசுவை விசுவாசித்த யூதர்களுக்கு உதவினார்களோ அல்லது உதவ வில்லையோ அவர்கள் அனைவரும். அவர்கள் ஒரு கூட்டமாக அல்லாமல் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவர்கள் யூதர்களுக்கு செய்த அல்லது செய்யாத செயல்களின் அடிப்படையில் இயேசு கிறிஸ்துவால் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

## புறஜாதி மக்களுக்கான நியாயத்தீர்ப்பு நடக்கும் சமயம்



**அர்மகெதோன் யுத்தம் முடிந்த உடன்.**

*மத் 25: 31 அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.*

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, அர்மகெதோன் யுத்தம் முடிந்து, அந்திக்கிறிஸ்துவின் படைகள் தோற்கடிக்கப்பட்டு, சாத்தான் கட்டப்பட்ட பின் இயேசு கிறிஸ்து இந்த நியாயத்தீர்ப்பை செய்வார்.

இதற்கு முன் ***சகரியா 12:10 - 13:1; ரோமர் 11:25-29*** வரை உள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் யூதர்கள் அனைவர் மேலும் கிருபையின் ஆவி ஊற்றப்படும். அவர்கள் அனைவரும் மனந்திரும்புவார்கள். இயேசுகிறிஸ்துதான் உண்மையான **மேசியா** என்று அறிந்து கொள்வார்கள். அவர்கள் குத்தின, அடித்த, கொலைசெய்த இயேசு கிறிஸ்துவை பார்த்து மனங்கசந்து அழுது துக்கிப்பார்கள். அவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். அப்போது இந்த நியாயத்தீர்ப்பு நடக்கும்.



## புறஜாதிமக்களுக்கான நியாயத்தீர்ப்பு நடக்கும் இடம்

**எருசலேம்.**

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு பிறகு எருசலேம் உலகத்தின் தலைநகரமாக இருக்கும். எருசலேமில் கட்டப்பட்டிருக்கும் தேவாலயம் உலகத்தின் தலைநகரக்கட்டிடமாக இருக்கும். இயேசு கிறிஸ்து எருசலேம் தேவாலயத்தில் சிங்காசனத்தில் இருந்து உலகத்தை ஆளுகை செய்வார். இந்த நியாயத்தீர்ப்பு அப்போது அவருக்கு முன்பாக எருசலேமில் நடக்கும்.



*லூக்கா 1: 32 அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.*

*33 அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.* ***( ஏசாயா 2:2-4 )***

## இந்த நியாயத்தீர்ப்பின் நோக்கம்



இஸ்ரவேலரோடு சம்பந்தப்பட்டவர்களில் யார் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார், யார் பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியில் பிரவேசிப்பார் என்று தீர்மானிப்பது.

*மத் 25: 34 அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.*

*41 அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

***( வெளி 11:15; சங் 37:11; மத் 5:5 ).***

## பங்கு கொள்பவர்கள்



**1. இயேசு கிறிஸ்துவின் சகோதரர். 2. செம்மறி ஆடுகள்.**

**3. வெள்ளாடுகள்**

**1. இயேசு கிறிஸ்துவின் சகோதரர்:** ***மத் 25:40*** ல் **"என்சகோதரரான இவர்களில்"** என்று குறிப்பிடப்பட்டிருப்பவர்கள்.



உபத்திரவக்காலத்தில் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்த யூதர்கள். இவர்கள் இஸ்ரவேலரில் முத்திரையிடப்பட்ட **1,44,000** பேருடைய சுவிசேஷ செய்தியை கேட்டு இயேசுவை விசுவாசித்தவர்கள். மாம்சப்பிரகாரமாக இயேசுகிறிறிஸ்துவின் சகோதரர்கள் ***( மத் 10:6; யோவான் 1:11; ரோமர் 9:5 ).*** இவர்கள் 'மிருகத்தின் முத்திரையை *( வெளி 13:16-17 )* தரிக்காமல் இருந்தவர்கள். ஆகவே இவர்களால் வாங்கவோ விற்கவோ முடியாமல் இருந்தவர்கள். மிகுந்த உபத்திரவங்களை தங்கள் விசுவாசத்துக்காக சகித்தவர்கள். இவர்களால் வாங்கவோ விற்கவோ முடியாமல் இருந்ததனால் இவர்கள் உயிர்வாழ்வதற்காக இயேசுகிறிஸ்துவில் விசுவாசித்த மற்ற புறஜாதி மக்கள் இவர்களுக்கு உணவு, இருப்பிடம் கொடுத்து பாதுகாப்பார்கள். அவர்களது உதவியால் இந்த யூதர்கள் பிழைத்திருப்பார்கள்.



**2. செம்மறி ஆடுகள்:** இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது உலகத்தில் வாழ்ந்திருந்த மக்களில் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரது சகோதரர்களாகிய யூதர்களை ஏற்றுக்கொண்டு உபசரித்தவர்கள். இந்த நியாயத்தீர்ப்பின் போது இவர்கள் இயேசு கிறிஸ்துவின் வலது பக்கத்தில் நிறுத்தப்படுவார்கள். இந்த யூதர்களை அவர்கள் உபசரித்ததால் அவர்கள் இயேசுவை உபசரித்தவர்களானார்கள். அவர்களது நோக்கம் அர்ப்பணிப்போடு கூடிய அன்பு. இந்த யூதர்களை உபசரித்ததால், இந்த புறஜாதி மக்கள் தங்கள் உயிருக்கே அபாயம் வரவழைத்துக்கொண்டவர்கள். அந்திக்கிறிஸ்துவின் எதிர்ப்பையும் மீறி விசுவாசிகளான யூதர்களை பாதுகாத்தவர்கள். இவர்கள் உபத்திரவக்காலத்தில், நிர்க்கதியாக நின்ற யூதர்களை தங்கள் வீடுகளிலும் நாடுகளிலும் ஏற்றுக்கொண்டு உபசரித்தவர்கள். *மத் 10:40* ன் படி, அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு உபசரித்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படாதவர்கள் ஆக இருப்பார்கள். இவர்கள் அனைவரும் மிருகத்தின் முத்திரையை தரித்துக்கொள்ளாதவர்கள் ஆக இருப்பார்கள். ஏனென்றால் மிருகத்தின் முத்திரையையோ, நாமத்தையோ, நாமத்தின் இலக்கத்தையோ தரித்தவர்கள் அனைவரும் நித்திய நரகத்துக்கு அனுப்பப்படுவார்கள் ***( வெளி 14: 9-11 ).***






**3. வெள்ளாடுகள்:** இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது உலகத்தில் வாழ்ந்திருந்த மக்களில் இயேசுவை விசுவாசிக்காமல் இருந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் மிருகத்தின் முத்திரையை தரித்தவர்களாக இருப்பார்கள். அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்பட்ட ராஜ்யங்களிலும் அல்லது அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படாத ராஜ்யங்களிலும் உள்ளவர்கள். நிர்க்கதியாக நின்ற யூதர்களை உபசரிக்காத புற ஜாதி மக்கள். இயேசு கிறிஸ்துவின் சகோதரர்களை ஏற்றுக்கொள்ளாததினால் இயேசுவையே ஏற்றுக்கொள்ளாதவர்கள். சுயநலவாதிகள். தங்கள் நலத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு வாழ்ந்தவர்கள். மிகுந்த உபத்திரவத்தின் மத்தியில் வாழும் இயேசுவின் சகோதரராகிய யூதர்களின் நலனை கருதாதவர்கள். இந்த நியாயத்தீர்ப்பின் போது இவர்கள் இயேசு கிறிஸ்துவின் இடது பக்கத்தில் நிறுத்தப்படுவார்கள்.



## செம்மறி ஆடுகளுக்கு பரிசு

**உலகம் உண்டானது முதல் ஆயத்தம் பண்ணப்பட்ட ராஜ்யம்.**

*மத் 25:34 அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது*



*முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்.*
இவர்களது செயல்களினால் இவர்கள் பிதாவினால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் விசுவாசத்தால் மறுபடியும் பிறந்தவர்கள் ஆகிறார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். ஆயிர வருட அரசாட்சிக்குள் இவர்களும் பிரவேசிப்பார்கள். இயேசுவின் ஆளுகைக்குள் பிரவேசிப்பார்கள். உலகம் உண்டானது முதல் இவர்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்.

## வெள்ளாடுகளுக்கு தண்டனை

**சாத்தானுக்கும் அவனது தூதர்களுக்கும் ஆயத்தம்பண்ணப்பட்ட நித்திய நரக அக்கினி.**



***மத் 25:41*** *அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.* இவர்களது செயல்களினால் இவர்கள் சபிக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள். இவர்கள் நித்திய அக்கினியில் - அதாவது நித்திய தண்டனைக்குள்ளாக ஆக்கப்படுகிறார்கள் *( மத் 25:46; வெளி 14:9-11 ).* இப்போதே இவர்கள் நித்திய நரக அக்கினிக்குள்ளாக தண்டிக்கப்பட்டதால் இவர்கள் வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பில் பங்கெடுக்க மாட்டார்கள். நரகம், உண்மையில் இவர்களுக்காக சிருஷ்டிக்கப்படவில்லை. அது பிசாசுக்காகவும் அவனது தூதர்களுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால் இந்த மக்கள் தாங்களாகவே தேர்ந்தெடுத்து பிசாசின் அடிமைகளானதினால் நரகத்துக்கு அனுப்பப்படுகிறார்கள்.

**இந்த நியாயத்தீர்ப்பு முடிந்த உடன் ஆயிரவருட அரசாட்சி பூமியில் ஆரம்பிக்கும்.**

**ஆயத்தமாயிருப்போம்,**
**மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்.**

**ஆமென்.**

***குறிப்பு:*** இதன் தொடர்ச்சியாக - ஆயிர வருட அரசாட்சி, கோக் மகோக் யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.
இதற்கு முன்பு தொடர்ச்சியாக வேதாகம ஆட்சி முறைக்காலங்கள், சபை எடுத்துக்கொள்ளப் படுதல், அந்திக்கிறிஸ்து, உபத்திரவக்கால சம்பவங்கள், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, அர்மகெதோன் யுத்தம் ஆகிய வேதபாடங்கள் வெளியிடப்பட்டுள்ளன. படித்து பயனடையுங்கள்.

**நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**
If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com Ph: 968 25572195, 99663557.

**Resources;** International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament) etc. All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses may be above or below than the mentioned English Bible verse.

-----------------------